**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09032025-8598

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.10.2024

Accepted: 15.12.2024

Published: 01.01.2025

Citation:
Kalavathi, V. "Textual Variations in Akananoor Hymns." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 11–15.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8598

*Corresponding Author:
thilakathilakavathi20@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tamil Architecture in Nedunalwadai

**D. Karthikeyan**
*Assistant Professor, Department of Tamil Studies*
*Government Arts College (Grade-I), Ariyalur, Tamil Nadu, India*
*(Affiliated to Bharathidasan University)*

**R. Thilakavathi**
*Full Time Ph.D. Scholar, Department of Tamil Studies*
*Government Arts College (Grade-I), Ariyalur, Tamil Nadu, India*
*(Affiliated to Bharathidasan University)*
*https://orcid.org/0009-0000-2250-6836*

**Abstract**
*The architecture of the Tamils is understood to include achievements in art and science-based technologies that the world marvels at. Tamil Architecture is the art and science of architectural design of the ancient Tamils. Tamil architecture had a special place in the architectural technique a thousand years ago. Architecture is one of the arts cherished by the Tamils. The building was created to build a shelter for man to protect himself. This building gradually developed as a house, a house, a palace, and a temple. About the architecture of the Tamils we find in Sangha literary threads, we find rare information about Nedunalvadai, one of the Sangha literature books, contains information about architecture.*
***Keywords:*** *Nedunalvadai, Tamizhar, Architecture*

**References**

1. Deivanayagam Co., Architecture, New Century Bookhouse (B) Litt, Chennai.
2. Dakshinamurthy A, Tamil Civilization and Culture, Jaffna Publications, Chennai, 2021.
3. Venkatasamy Nattar, Peacock China, Beauty Arts Raised by Tamils, Manivaskar Publishing House, Chennai, 2001.
4. Perumal A.K., Tamil Art and Culture, Bavai Publications, 2014.
5. Tamil Nadu History Committee, Tamil Nadu History Society Period Biography, Chennai, 2022.
6. Muthu Ramamurthy, Nedunalvadai Source and Text, Gaura Publishing House, Chennai.

# நெடுநல்வாடையில் தமிழரின் கட்டடக் கலை

***முனைவர் த. கார்த்திகேயன்***
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை, அரசு கலைக்கல்லூரி (நிலை-1), அரியலூர்

***ரா. திலகவதி***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை
அரசு கலைக்கல்லூரி (நிலை-1), அரியலூர்

***ஆய்வு சுருக்கம்***

*கலை மற்றும் அறிவியல் சார்ந்த தொழில்நுட்பங்களில் சாதனைகளை உள்ளடக்கியதாக தமிழரின் கட்டடக்கலை விளங்குகிறது. அக்காலத்தில் கட்டப்பட்ட கோவில்களும் கோட்டைகளும் அணை களும் தமிழர்களின் அறிவியல் நுட்பத்தினையும் தொலைநோக்கும் திறனையும் கலை அறிவையும் பறைச் சாற்றுவதாக அமைந்துள்ளன. தமிழர் கட்டடக்கலை என்பது பண்டையக்காலத் தமிழர்களின் கட்டட வடிவமைப்புச் செய்வதற்கான கலையும் அறிவியலும் ஆகும். தமிழர் கட்டிடக்கலை ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னரே கட்டிடக்கலை நுட்பத்தில் சிறப்பான இடத்தை பெற்றிருந்தது மனிதன் தன்னைகாத்துக் கொள்ள உறைவிடம் அமைக்க உருவானதே கட்டடம். இது நாளடைவில் வீடு, மாளிகை, அரண்மனை, கோயில் என படிப்படியாக வளர்ச்சியடைந்தது. சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடையில் கட்டடக்கலை சார்ந்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. அரண்மனை அமைப்பு முறை, அரண்மனை கோபுர வாயில், அரண்மனை முற்றம், நில முற்றம், அந்தபுரத்தின் கட்டட அமைப்பு முறை பற்றிய சான்றுகள் தெளிவாக நெடுநல்வாடையில் எடுத்து கூறப்பட்டுள்ளன.*

***கலைச் சொற்கள்:***

| | | | |
|---|---|---|---|
| *1.* | *ஐயவி* | - | *வெண்சிறு கடுகு* |
| *2.* | *எகினம்* | - | *அன்னம் அல்லது கவரிமான்* |
| *3.* | *கம்மியள்* | - | *தொழிலாளி* |
| *4.* | *தருமணல்* | - | *புதுமணல்* |
| *5.* | *அருங்கடி* | - | *அரியகாவல்* |
| *6.* | *பாய் இருள்* | - | *பரந்த இருள்* |
| *7.* | *கோள் அமை* | - | *வலிமை பொருந்திய* |

## முன்னுரை

கட்டடக்கலையை எல்லா கலைகளுக்கும் தாய் என்று அழைப்பார்கள். கட்டடக் கலை என்பது இன்றைய தொழில்நுட்ப இயலில் பொறியியலின் பிரிவுக்குள் அடக்கிச் சுட்டப்படும் ஒரு துறையாகும். ஈராயிரம் ஆண்டு வரலாற்றை உடைய தமிழ்ச்சமுகத்தில் பொறியியலும் அதன் பிரிவாகிய கட்டிடக் கலை பற்றிய அறிவும் திறனும் நுட்பமும் இருந்தன. ஒரு சமுதாயத்தின் தீவிரமான ஈடுபாடு இல்லாவிட்டால் எந்த ஒரு கலையும் வளர்ச்சியுறவே இயலாது. தமிழச் சமுகம் இத்தகைய தீவிர ஈடுபாடுடன் விளங்கியுள்ளது.

பழந்தமிழர் இத்தகைய அக்கரையையும் ஆர்வத்தையும் கட்டடக் கலையில் செலுத்தியுள்ளனர்.

கட்டிடக் கலையின் வளர்ச்சிக்கு தமிழும் தமிழினமும் தமிழ் இலக்கியங்களும் நிலைகளன்களாக விளங்கின. சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடையில் தமிழர்களின் கட்டடக்கலை பற்றிய செய்திகளை அறியமுடிகிறது. சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடையில் தமிழர்களின் கட்டிட கலையின் நுணுக்கங்கள், கட்டடக் கலையின் சிறப்பு, அரண்மணையின் அமைப்புமுறை காலநிலைக்கு ஏற்ப வீடுகள் அமைந்த முறை பற்றிய செய்திகள் தெளிவாக எடுத்து கூறப்பட்டுள்ளது.

### அரசியின் அரண்மனை வகுத்த முறை

ஒரு கட்டிடம் சிறந்து விளங்க வேண்டுமெனில் அதன் அமைப்பு கலைநயத்துடன் இருக்க வேண்டும். சங்க காலத்தில் கட்டிடங்களைக் கட்டட நூல் கூறும் இலக்கண அறிவு நிரம்ப பெற்ற நூலறிவுப் புலவர்கள் இருந்துள்ளனர். அரசியின் அரண்மனைக்கு ஒப்பாக அமைக்கப்பட்டுள்ளது. கட்டிடக்கலை நூலில் தேர்ச்சி பெற்ற கலைஞன் அரசிக்கு மனை வகுத்தான் அவன் கயிறு கட்டி மனையைப் பிரித்துக் கட்டினான். சூரியன் ஏறும் பொழுதாகவும் இல்லாத நண்பகலில் இருகோல் குறிநிலை நிறுத்தி அவன் நிலத்தின் திசையைக் கணித்துக் கொண்டான். திசைமுகத்துக்கு ஏற்ப கயிறு கட்டி சுவர் அமைக்க அடிக்கோடு போட்டு கொண்டான். தெய்வங்களை வாழ்த்திய பின்னர் மனையை வகுத்துக் காட்டினான். இந்த செய்தியினை,

**"விரிகதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம்**
**இருகோல குறிநிலை வழுக்காது, குடக்கு ஏர்பு,**
**ஒரு திறம் சாரா அரைநாள் அமயத்து**
**நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு**
**தேஎம் கொண்டு, தெய்வம் நோக்கு,**
**பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப, மனை**
**வகுத்து"** **(நெடுநல்வாடை 73-78)**

நெடுநல்வாடையில் காணப்படும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

புறநானூற்றில் ஔவையார் பாடலில் தக்கரும், சொல்லரும் நூலறி புலவர்களும் மற்றும் வாஸ்து வல்லுநர்களும், கட்டடக்கலை சார்ந்த தொழி வல்லுநர்களாக விளங்குகின்றனர் என்ற கட்டடக்கலை வல்லுனரை பற்றிய செய்தி,

**"வைசல் எண்தேர் செய்யும் தச்சன்"**
**(புறநானூறு 87-3)**

புறநானூறு பாடலின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

### அரண்மனை நிலைவாயில்

நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் அரண்மனை பழந்தமிழர் மன்னர்களின் வாழிடத்தையும் அவர்தம் கட்டிடக்கலை நுட்பத்தையும் புலப்படுத்துகிறது. அரண்மனையின் நுழைவாயில் மலையளவு உயர்ந்து காணப்பட்டது. அரண்மனையின் நுழைவாயிலினை பெரிய இரட்டைக் கதவுகளைக் கொண்டு அமைத்தனர். கதவுகள் இடைவெளி இன்றி காணப்பட்டன. மதிலின் கதவுகள், உத்திரம் என்ற விண்மீனின் வலிமை பொருந்திய சிறந்த மரத்தால் செய்யப்பட்டிருந்தன. அக்கதவுகளில் குவளை மலரின் அரும்பு இதழ் விரிந்ததைப் போன்ற அமைப்புடன் புதுமை தோன்ற செய்யப்பட்ட கைப்பிடிகளை நன்கு பொருந்துமாறு பதித்திருந்தனர். வாயிலின் உயர்ந்த நிலையில் வெண்சிறு கடுகினை அரைத்துப் பூசி நெய் தடவியிருந்தனர். வெற்றி கொடியினைத் தாங்கி வரும் யானைகள் அரண்மனைக்குள் நுழையும் அளவிற்கு உயர்ந்த நிலைகளையடையதாய் அரண்மனையின் வாயில் அமைந்திருந்தது. இந்த செய்தியினை,

**"ஒருங்கு உடன் வளைஇ, ஓங்குநிலை வரைப்பின்**
**பரு இரும்பு பிணித்து, செல்வரக்கு உர்இ**
**துணைமான கதவம் பொருத்தி, இணைமாண்டு**
**நாளொடு பெரிய கோள் அமை விழுமரத்து**
**போது அவிழ் குவளைப் புதுப்பிடிகால் அமைத்து**

**தாழொடு குயின்ற போர் அமை புணர்ப்பின்**
**ஐயவி அப்பிய நெய்யனி நெடுநிலை**
**வென்றுஎழு கொடியொடு வேடிய செனறுபுக**
**குன்று குயின்றன்ன ஓங்குநிலை வாயில்"**
**(நெடுநல்வாடை 79-88)**

என நெடுநல்வாடையில் நக்கீரர் அழகாக எடுத்துக் கூறியுள்ளார்.

### அரண்மனை முற்றம்

அரசி தங்கியிருக்கும் அரண்மனைக்கு "திருநாள்" என்று பெயர். அதன் முன்புறமும் பின்புறமும் முற்றம் உள்ளது. அந்த முற்றத்தில் வெளியிலிருந்து மணல் கொண்டு வரப்பட்டு பரப்பப்பட்டுள்ளன. அந்த மணலில், வெண்ணிற எகினமும், மான்களும் விளையாடிக் கொண்டிருந்தன. இதனை,

**"திருநிலை பெற்ற தீதுநீர் சிறப்பின்**
**திருமணல் ஞமிரிய திருநகள் முற்றத்து**
**நெடுமயிர் எகினத் தூநிற ஏற்றை**
**குறுந்கால் அன்னமொடு உகளும் முன்கடை"**

நெடுநல்வாடை பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

### அந்தப்புரத்தின் அமைப்பு

அரசியின் அந்தப்புர அமைப்பு மிக அழகிய வேலைபாடுகளுடன் காணப்பட்டது. அரசியின் அந்தப்புரத்தில் யவனர்களால் உருவாக்கப் பெற்ற சிறந்த வேலைப்பாடுகளுடன் விளங்கும் பாவையின் கையில் ஏந்தியிருந்த கை விளக்கினை நெய்யினை ஊற்றி ஏற்றிவைத்திருந்தனர். விளக்குகள் பருத்த திரிகள் கொண்டு எற்றப்பட்டு இருந்தன. விளக்கில் நெய் குறையும் போதெல்லாம் நெய் வார்த்துக் திரியைத் தூண்டி நன்கு எரியுமாறு செய்தனர். இப்பாவை விளக்கின் ஒளி, அரண்மனையின் பல இடங்களிலும் பரவி இருந்த இருளினை நீக்கியது.

அந்தபுரத்தில் பல இடங்களில் வெள்ளி போன்ற சாந்தினைப் பூசி இருந்தனர். நீலமணியைக் காண்பது போன்ற கரிய திரண்ட வலிமையான தூண்களும் காணப்பட்டன. செம்பினால் உருவாக்கப்பட்டது போன்று செய்யப்பட்ட நெடிய சுவரிலே பல வடிவத்தினாலான பூக்களும் ஒரு கொடியைச் சுற்றி இருத்தல் போன்ற காட்சியும் வரையப்பட்டிருந்தது. இவ்வாறு காண்பதற்கு இனிய நல்ல இல்லமாகக் கரு தங்கும் அறை (கரு அறை) என்று பெயர் பெற்ற அந்தபுரம் காட்சியளித்தது. அரசியின் அந்தப்புர அமைப்பின் சிறப்பினையும் அந்தர அழகினையும் இதனை

**"யவனர் இயற்றிய வினைமாண் பாவை**
**கைஏந்தும் ஐஅகல் நிறைய நெய்சொரிந்து**
**பருஉத்திரி கொள்இய கருஉந்தலை நிமிர்னி**
**அறுஅறு காலை தோறு அமைவரப் பண்ணிப்**
**பல்வேறு பள்ளிதொறும் பாய்இருள் நீங்க**
**........ .............. ...............**
**செம்பு இயன்றன்ன செய்வுஉறு நெடுஞ்சுவர்**
**உருவப் பல்பூ ஒருகொடி வளைஇ**
**கருவொரு பெயரிய காண்புஇன் நல்இல்''**

நெடுநல்வாடை பாடல் அடிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

### காலநிலைக்கேற்ற கட்டமைப்பு

மின்சாரம் கண்டறியப்படாத கால கட்டத்தில் பழந்தமிழர் வாழ்க்கை இயற்கையோடு இணைந்தே இருந்தது. அவர்தம் வீடுகள் காலநிலைக்கு ஏற்ற வகையில் கட்டப்பட்டிருந்தன. கோடையின் வெப்பத்தைப் போக்க வீடு களின் உயர்மாடம் மேற்பகுதிக் கூரையின்றி அமைக்கப்பட்டிருந்தது. வீடுகளின் உட்பகுதியில் காற்று வரும் பான்மையில் பலகணிகளுடன் கூடிய முறைமையும் இருந்தது. குளிர்காலத்தில் தென்றல் வரும் பலகணிகளைத் திறவாது மக்கள் அடைத்தே வைத்திருந்தனர். இதனை

**"வானுர நிவந்த மேல்நிலை மருங்கின்**
**இவனிற் பள்ளி தென்வளி தரூஉம்**
**நேர்வாய்க் கட்டளை திரியது திண்ணிலை**
**பேர்வாய்க் கதவம் தாதொழு துறப்ப"**
**(நெடுநல். 60 – 63)**

என நெடுநல்வாடை விவரிக்கிறது.

**"வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇக்**

கைபுனை குறுந்தொடி தத்த பைபய"
(பெரும்பானாற்றுப்படை 333-335)

பெருபானாற்றுப்படையில் கூறப்பட்டிருந்த காவிரிப்பூம்பட்டினத்தில் உயர்ந்த மாடங்கள் இருந்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

## முடிவுரை

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவையாக கருதப்படுபவை உணவு, உடை, உறையுள் மனிதன் பாதுகாப்புடன் வாழத் தனக்கொரு இருப்பிடம் அமைக்க எண்ணிய எண்ணம் கட்டிடக்கலையின் தோற்றத்திற்கு வித்திட்டது. பழந்தமிழர்கள் கலைநயத்துடன் பல்வேறு விதமான கட்டிடங்களை கட்டி வாழ்ந்து வந்துள்ளனர் என்று சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான நெடுநல்வாடையில் கட்டடக்கலை வளர்ச்சி பற்றி செய்திகள் அழகாக எடுத்து கூறப்பட்டுள்ளன. அரண்மனை நுழை வாயிலின் சிறப்பு அந்தபுரம் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது பற்றியும் செய்திகள் காணப்படுகின்றன. காலநிலைக்கு ஏற்ப மக்கள் வீடுகள் அமைத்த குறிப்புகளும் காணப்படுகின்றன. நெடுநல்வாடை மூலம் கட்டடக்கலை எவ்வாறு சிறப்பாகச் சங்க காலத்தில் காணப்பட்டது என்பதை தெரிந்துகொள்ள முடிகிறது.

## துணைநூற் பட்டியல்

1. தெய்வநாயகம் கோ., கட்டிடக்கலை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை.
2. தட்சிணாமூர்த்தி அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, 2021.
3. வேங்கடசாமி நாட்டார், மயிலை சீனி, தமிழர் வளர்த்த அழகு கலைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2001.
4. பெருமாள் அ.கா, தமிழர் கலையும் பண்பாடும், பாவை பப்ளிகேசன்ஸ் சென்னை, 2014.
5. தமிழ்நாடு வரலாற்றுக் குழு, தமிழ்நாடு வரலாறு சங்க காலம் வாழ்வியல், சென்னை, 2022.
6. முத்து ராமமூர்த்தி, நெடுநல்வாடை மூலமும் உரையும், கௌரா பதிப்பகம், சென்னை.